**தலைப்பு 256 - கம்பஹா மாவட்ட செயலகம்**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

(அ) வறுமையை ஒழிப்பதற்கான ஆரம்ப முயற்சிகள்

(ஆ) தேர்தல்களை ஒருங்கிணைத்தல்

(இ) அபிவிருத்திச் செயற்திட்டங்களை திட்டமிடலும் மேற்பார்வை செய்தலும்.

(ஈ) அனர்த்த நிவாரணச் செயற்திட்டங்களையும் புனர்நிர்மாணச் செயற்திட்டங்களையும் நிர்வகித்தல்

(உ) மாவட்டச் செயற்திட்ட நிர்வாகமும் வழிகாட்டலும்

(ஊ) வருமானங்களைச் சேகரித்தல்.

## 1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ) | கம்பஹா | (ஊ) | நீர்கொழும்பு | (ஓ) | தொம்பே |
| (ஆ) | மினுவாங்கொடை | (எ) | அத்தனகல்ல | (ஔ) | களனி |
| (இ) | திவுலபிட்டிய | (ஏ) | ஜா-எல | (க) | பியகம |
| (ஈ) | மீரிகம | (ஐ) | வத்தளை | | |
| (உ) | கட்டான | (ஒ) | மஹர | | |

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

கம்பஹா மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணைக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 18 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கம்பஹா மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கில் (அ) முதல் (ஈ) வரை காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புகள் மற்றும் 1.6 இலிருந்து 1.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

## (ஆ) ஒதுக்கீட்டுக்கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (i) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்

மாவட்ட செயலகத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 861,051,707 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 803,779,312 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டில் ரூபா 57,272,395 தொகை அல்லது 6.65 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவுகள் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 799,751,707 | 768,018,358 | 31,733,349 | 3.96 |
| மூலதனம் | 61,300,000 | 35,760,954 | 25,539,046 | 41.66 |
| மொத்தம் | 861,051,707 | 803,779,312 | 57,272,395 | 6.65 |

### (ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்

பல்வேறு செயற்பாடுகளுக்காக 27 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 17 திணைக்களங்களினால் ரூபா 5,864,214,886 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதி ஏற்பாட்டில் முறையே ரூபா 2,309,192,842 மற்றும் ரூபா 3,407,868,495 தொகையாக ரூபா 5,717,061,337 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் இறுதிவரையில் முறையே ரூபா 125,459,588 மற்றும் ரூபா 21,693,961 தொகையாக ரூபா 147,153,549 கூட்டுத்தொகையான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த

சேமிப்பு வழங்கப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து முறையே 5.15 சதவீதமாகவும் 0.63 சதவீதமாகவும் இருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 25601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | இழிவு எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 25601 | 68,000,000 | 64,290,194 | 54,000,000 | 57,337,958 | 240,000,000 | 232,842,469 |

25601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,612,708 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்கின் மீதி ரூபா 470,535,812 ஆக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 வருடங்களை விஞ்சிய ரூபா 1,192,685 தொகையான பொது வைப்பு மீதி தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 10 வருடங்களை விஞ்சிய ரூபா 16,729,602 தொகையான காணி வைப்பு மீதி தொடர்பாக நிதிப் பிரமாணம் 571(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) களனி பிரதேச செயலகத்தில் இரண்டு செயற்திட்டங்களுக்காக 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 100,000 உரிய செயற்பாடுகளில் பயன்படுத்தப்படாது மீள அனுப்பப்பட்டிருந்தது.

## 1.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

---

### 1.6.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

---

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

---

மாவட்ட செயலகத்தின் ஒரு உத்தியோகபூர்வ இல்லம் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்

---

மாவட்ட செயலகத்தினால் சில சொத்துக்கள் முறையற்ற வகையில் வெளித்தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சொத்து வகை | சொத்துக்களின் எண்ணிக்கை/ அலகுகளின் எண்ணிக்கை | சொத்து வழங்கப்பட்ட நிறுவனம் |
|---|---|---|
| (i) உத்தியோகபூர்வ இல்லக் கட்டிடம் | 01 | தேசிய இளைஞர் சேவை மன்றம் - உடுகம்பொல |
| (ii) -மேற்படி- | 01 | சமூர்த்தி வங்கி – ஹொரம்பெல்ல |

(iii) மினுவன்கொடை பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்தில் உன்னாறுவயில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் அனுமதியற்ற குடும்பம் ஒன்று வாழ்ந்து வருகின்றமை.

(iv) 5 பிரதேச செயலகங்களின் 7 உத்தியோகபூர்வ இல்லங்கள் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களை நடாத்திச் செல்வதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

## 1.8 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நிதிப் பிரமாணம் 1646 | இரண்டு பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்ட குழாம் வாகனங்களுக்குரிய 2013 ஆம் ஆண்டிற்கான நாளாந்த ஓட்ட அட்டவணை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) திறைசேரிச் சுற்றுநிருபம் | |
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றுநிருபம் | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமாகக் காணப்பட்ட சகல கணனி, உப பாகங்கள் மற்றும் கணனி மென்பொருள் தொடர்பாக கணனிச் சொத்துப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) கம்பஹா மாவட்டச் செயலாளரின் 2007 யூன் 27 ஆந் திகதிய 1/8/18 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கை | வருடத்திற்கு நான்கு தடவைகள் ஒரு கிராம உத்தியோகத்தர் அலுவலகம் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் மீரிகம பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திற்குரிய 84 கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் 2013 ஆம் ஆண்டின் போது ஒரு தடவையேனும் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.9 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதிலுள்ள பலவீனங்கள்

செயற்திட்டங்களை நிறைவேற்றும் போது பின்வரும் தாமதங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

## (அ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

(i) பிரதேச செயலகங்களில் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் அவதானிக்கப்பட்டன.

| **செயற்திட்டம்** | **மதிப்பிடப்பட்ட கிரயம்** | **பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி** | **2013.12.31 இல் உள்ளவாறு செயல் முன்னேற்றம்** | **தாமதத்திற்கான காரணம்** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | | சதவீதம் | |
| சேவைப்பகுதி நிர்மாணம்- களணி பிரதேச செயலகம் | 1,826,435 | 2013.12.31 | 75 | பணம் கிடைக்காமை |
| சேவைப்பகுதி நிர்மாணம்- பியகம பிரதேச செயலகம் | 750,000 | 2013.12.31 | 75 | உரிய வகையில் மதிப்பீடு தயாரிக்கப்படாமை |

(ii) பிரதேச செயலகங்களில் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றும் போது தாமதம் ஏற்பட்டிருந்தன.

| **செயற்திட்டம்** | **மதிப்பிடப்பட்ட கிரயம்** | **பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி** | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவினம்** | **தாமதத்திற்கான காரணம்** |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | | ரூபா. மில்லியன் | |
| வீதிக்கு காபட் இடல் | 573.6 | 2013.12.31 | 265.3 | நீர்க்குழாய் பதித்தலில் தாமதம் |
| நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 6.9 | 2013.12.31 | 5.2 | செயற்திட்டத்தை அங்கீகரித்தலில் தாமதம் |
| தொம்பே வைத்தியசாலை புனர்நிர்மாணம் செய்தல் | 11.3 | 2013.12.31 | 11.3 | பிழையான மதிப்பீட்டின் காரணமாக |

| | | | | |
|---|---|---|---|---|
| நீர்கொழும்பு இரவுச் சந்தை நிர்மாணம் | 50.0 | 2013.12.31 | 50.0 | காணி தீர்க்கப்படாமை |
| படஹிர ரன் அருண நிகழ்ச்சித் திட்டம் | 270.0 | 2013.12.31 | 270.0 | அமைச்சின் அங்கீகாரம் கிடைக்காமை |

**(ஆ) நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்முன்னேற்றம் பெற்றிராத செயற்திட்டங்கள்**

---

இரண்டு பிரதேச செயலகங்களில் புதிய கட்டிடங்களை நிர்மாணிக்கும் ஆரம்பச் செயற்பாடுகளுக்காக 2013 ஆம் ஆண்டின் போது வருடாந்த பாதீட்டு மதிப்பிட்டின் பிரகாரம் ரூபா 26 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் 97 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

## 1.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) 2013 மே 28 ஆந் திகதி ரூபா 183,480 தொகையில் கம்பஹா பிரதேச செயலகத்திற்கு இரண்டு கணனிகள் தனியார் நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் உரிய மாதிரிகளுக்கு இணங்கியிருக்கவில்லை.

(ஆ) அத்தனகல்ல பிரதேச செயலகத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 690,000 தொகையில் 3 மல்டிமீடியா புரஜெக்டர் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கேள்வி சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதியாக 2013 நவம்பர் 25 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வியை மதிப்பிட்டிற்கு உள்ளாக்குதல், சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி பல்வேறு திகதிகளிலும் திறக்கப்பட்டிருத்தல், உரிய மாதிரிகளுக்கு இணங்கும் வகையில் தொழில்நுட்ப மதிப்பிட்டு அறிக்கை தயாரிக்காமை, சமர்ப்பிக்கப்பட்ட சகல கேள்விகளையும் மதிப்பீட்டிற்கு உள்ளாக்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**1.11 நட்டமும் இழப்பும்**

---

நட்டமும் இழப்பும் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கப் வாகனம் 2013 மார்ச் 01 ஆந் திகதி விபத்திற்குள்ளாகியமையினால் ஏற்பட்ட நட்டம் மற்றும் இழப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கின் நட்டம் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரண்டு வாகனங்கள் விபத்துக்குள்ளாகியிருந்தமை ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான விபரங்கள் இழப்பு மற்றும் நட்டப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இரண்டு கப் வாகனங்கள் விபத்திற்குள்ளாகி 3 - 7 வருடங்களுக்கிடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அந்த நட்டத்தை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது நிதிப்பிரமாணம் 109 இன் பிரகாரம் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நட்ட இழப்பு ஏற்பட்டதும் உடனடியாக நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் (4) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை மற்றும் அந்த நட்ட இழப்பு ஏற்பட்டு 03 மாதங்களுக்குள் பூரணமான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2013 மார்ச் 01 ஆந் திகதி மற்றும் 2013 செப்தெம்பர் 04 ஆந் திகதிகளில் ஏற்பட்ட இரண்டு வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இரண்டு பிரதேச செயலகங்களுக்குரிய இழப்பு தொடர்பான விபரம் இழப்பு மற்றும் நட்டப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**1.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற வகையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) ரன் அருண லிய அபிமன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட 11 உபகரணத் தொகுதிகளில் 3 தொகுதிகள் செயற்பாடற்றுக் காணப்பட்டமை உரிய பின்தொடர் அறிக்கையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கம்பஹா மாவட்டத்தில் 3 பிரதேச செயலகங்களில் உதவித் தொகை பெறுனர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பேட்டுக் குஞ்சு தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

| பிரதேச செயலகம் | உரிய வருடம்/வருடங்கள் | பகிர்ந்தளிக்கப்பட்ட பேடு/சேவல் குஞ்சுகளின் எண்ணிக்கை | உயிரிழந்த பேடு/சேவல் குஞ்சுகளின் எண்ணிக்கை | பேட்டுக் குஞ்சுகளுக்கிடையேயுள்ள சேவல் குஞ்சுகளின் எண்ணிக்கை | பின்தொடர் தகவல்களைப் பெறமுடியாதிருந்த குஞ்சுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| அத்தனகல்ல | 2011, 2012 மற்றும் 2013 | 16,360 | 2,878 | 1,741 | 6,955 |
| களனி | 2013 | 2,500 | - | - | 2,500 |
| பியகம | 2012 | 916 | 395 | 168 | 353 |
| மொத்தம் | | 19,776 | 3,273 | 1,909 | 9,808 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அத்தனகல்ல பிரதேச செயலகத்தின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்ட 16,360 பேட்டுக் குஞ்சுகளில் 6,955 தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட 9,405 பேட்டுக் குஞ்சுகளில் உயிரிழந்த குஞ்சுகளின் எண்ணிக்கை மற்றும் பேட்டுக் குஞ்சுகளிலிருந்து பெறப்பட்ட சேவல் குஞ்சுகளின் எண்ணிக்கையின் நட்டத்தின் பெறுமதி மொத்தச் செலவினத்தில் 49 சதவீதம் அதாவது ரூபா 1,443,530 ஆக இருந்தது.

(ii) பியகம பிரதேச செயலகத்தின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்ட 916 பேட்டுக் குஞ்சுகளில் உயிரிழந்த குஞ்சுகளின் எண்ணிக்கை மற்றும் பேட்டுக் குஞ்சுகளுக்குப் பதிலாக கிடைத்த சேவல் குஞ்சுகளின் எண்ணிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தில் 61 சதவீதத்திற்குச் சமமான

அதாவது ரூபா 175,948 தொகை சிக்கனமற்ற செலவினத்திற்குள்ளாகியிருந்தது.

(iii) களனி பிரதேச செயலகத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்ட பேட்டுக் குஞ்சுகள் தொடர்பாக பின்தொடர் அறிக்கை தயாரிக்கப்படாமையின் காரணமாக மேற்கூறப்பட்ட காலப்பகுப்பாய்வை மேற்கொள்ள முடியாதிருந்தது.

(இ) திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டின் போது கம்பஹா பிரதேச செயலகத்தின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்ட 14,476 பழக் கன்றுகளில் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட 6,884 பழக் கன்றுகளில் 21 சதவீதத்திற்குச் சமமான கன்றுகளின் அளவு அழிவடைந்திருந்ததுடன் அந்த கன்றுகள் கம்பஹா மாவட்டத்தின் காலநிலைக்கு ஒத்துவராத திராட்சை போன்ற கன்று வகையாக இருந்தது.

**1.13 முகாமைத்துவ நலிவுகள்**

-----------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியேற்பாட்டின் மூலம் மீரிகம பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 427,460 தொகையான பல்வேறு வகைகளுக்குரிய 165 உபகரணங்கள் 2014 ஒக்தோபர் மாதம் வரையிலும் உரிய நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 02 அபிவிருத்திச் செயற்திட்டங்களின் கீழ் பகிர்ந்தளிப்பதற்காக பியகம பிரதேச செயலகத்தினால் 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 236,400 தொகையான 273 பொருள் விடயங்கள் அலுவலக வளவிலும் களஞ்சியத்திலும் வைக்கப்பட்டிருந்தன.

(இ) கம்பஹா பிரதேச செயலகத்தின் மூலம் ஓய்வூதியம் பெற்ற இரண்டு ஓய்வூதியக் காரர்கள் மரணித்த மாதத்திற்கு பின்னருள்ள மாதத்திற்காக ரூபா 26,117 கூட்டுத்தொகையான ஓய்வூதியப் பணம் பிரதேச செயலகத்தினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அப்பணம் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) களனி பிரதேச செயலகத்திலிருந்து ஓய்வூதியம் பெறுகின்ற ஓய்வூதியக் காரர்களிடமிருந்து 2011 யூலை முதல் 2013 சனவரி வரையான காலத்தில் மரணித்த 9 ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியமாக ரூபா 416,782 கூட்டுத்தொகை பிரதேச செயலகத்தின் மூலம் அந்தந்த நபர்களின் வங்கிக்

கணக்குகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் அத்தொகையில் ரூபா 244,795 தொகையை மீள அறிவீடு செய்தல் நிச்சயமற்ற நிலைக்கு உள்ளாகியிருந்தது.

(உ) அத்தனகல்ல பிரதேச செயலகத்தினால் பழக் கன்றுகள் பகிர்ந்தளிக்கும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு 44,742 ஆக இருந்த போதிலும் 2011 இன் பின்தொடர் அறிக்கையின் பிரகாரம் பகிர்ந்தளிக்கப்பட்ட பழக்கன்றுகளின் எண்ணிக்கை 29,202 ஆக மாத்திரம் இருந்தது.

**1.14 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 46 | 37 | 09 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 27 | 22 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1677 | 1339 | 338 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 129 | 111 | 20 | 02 |
| | மொத்தம் | 1879 | 1509 | 372 | 02 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 370 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனம் தவறியிருந்தது. இடமாற்றலின் அடிப்படையில் கம்பஹா மாவட்ட செயலகத்திற்கு நியமிக்கப்பட்ட இரண்டு சாரதிகளினால் மிகை ஏற்பட்டிருந்தது.